செ.வெ.எண்.30/செப்டம்பர் நாள்.17.09.2020

**பத்திரிக்கைச் செய்தி**

எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக்காலத்தில் தமிழகம் முழுவதும் பரவலாக மழை எதிர்பாக்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் தற்போது பரவலாக இடி மின்னலுடன் மழை பெய்து வருகிறது.

தற்போது இடி மின்னலுடன் மழை பெய்வதால் மின்னல் தாக்கி உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் இடி மின்னலின் போது நீர் நிலைகளில் குளிப்பதையும், வெளியில் உலாவுவதையும், தவிர்க்கவேண்டும். மரங்களின் கீழே ஒதுங்குவதை தவிர்க்கவேண்டும். மின் வழிதடங்களின் அருகில் நிற்ககூடாது. வெட்ட வெளியில் இருக்க நேர்ந்தால் உடலை குறுக்கி குத்துக்காலிட்டு அமர்ந்து தலையை தாழ்த்திக்கொள்ள வேண்டும். மேலும் பலர் ஒன்று கூடி ஒரே இடத்தில் நிற்கக்கூடாது. இருசக்கர வாகனங்களில் செல்ல நேர்ந்தால் அருகில் உள்ள கட்டிடங்களுக்குள் பாதுகாப்பாக நின்றுவிட வேண்டும். கார் மற்றும் பேருந்துகளில் செல்ல நேர்ந்தால் வாகனத்தின் மேற்கூரை மற்றும் இரும்பு கைபிடிகளை தொடக்கூடாது. வீட்டிற்குள் இருக்கும்போது கதவுகள் மற்றும் ஜன்னல்களை மூடிவிட வேண்டும். மின்சாதனங்களை கண்டிப்பாக உபயோகப்படுத்தக்கூடாது.

மேலும் மழை, இடி, மின்னல் ஏற்படும் சமயங்களில் கால்நடைகளை மரங்களின் அடியிலும், மின்கம்பங்களின் அடியிலும் கட்டக்கூடாது. மேகங்கள் ஒன்று கூடி கருக்கும்போதே பாதுகாப்பான இடங்களில் கால்நடைகளை கட்டி வைக்க வேண்டுமெனவும், பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 x 7 நாள் முழுவதும் கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 1800 425 1071, 1800 425 7016 ஆகிய எண்களுடன் இயங்கி வருகிறது. மேலும், வாட்ஸ் அப் எண்.8903891077 ஆகிய எண்ணின் மூலம் மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு மழைக்கால இடர்பாடுகள் குறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**